செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 66 நாள்:30.11.2017

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் இன்று (30.11.2017) தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் அரசு முதன்மைச் செயலர், நிர்வாக இயக்குநர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் திரு.சந்திரகாந்த் பி.காம்ளே,இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் **மாற்றம் 2017 பசுமை கண்காட்சியினை** மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் இன்று (30.11.2017) தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் அரசு முதன்மைச் செயலர், நிர்வாக இயக்குநர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் திரு.சந்திரகாந்த் பி.காம்ளே,இ.ஆ,ப., அவர்கள் முன்னிலையில் மாற்றம் 2017 பசுமை கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் இருப்பதற்காக பிளாஸ்டிக் பை, டம்ளர், தட்டு, மெழுகு பூசப்பட்ட டம்ளர், என அனைத்து பிளாஸ்டிக் பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக எந்த பொருட்களை உபயோகப்படுத்தலாம் என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் எம்ஓபி அமைப்பின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த கண்காட்சி 30.11.2017, 01.12.2017 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடத்தப்படுகிறது. இக்கண்காட்சியில் 32 மாற்றுப்பொருட்களுக்கான தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் கலந்து கொண்டு மக்கும் குப்பைகளை கொண்டு மின்சாரம் தயாரித்தல், இயற்கை உரம் தயாரித்தல், சோலார் மின் உபயோக பொருட்கள், மறு சுழற்சிக்கான பொருட்கள், பயோகாஸ், தொழில்நுட்பம், இயற்கை விவசாயம், பழங்குடியினர் தயாரிப்புகள் என சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த பல பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கண்காட்சியில் மாற்றுப்பொருட்களை தயார் செய்வது குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும். இதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கவும் வாய்ப்புள்ளது. எனவே வணிகர்கள், விடுதி உரிமையாளர்கள், உணவகங்கள், பொதுமக்கள் அனைவரும் இக்கண்காட்சியை கண்டு பயனடையுமாறும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு தருமாறும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் திரு.அமர்குஷ்வாஹா,இ.ஆ.ப., அவர்கள், இன்கோசர்வ் நிர்வாக இயக்குநர் திரு.வினித், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தெ.பாஸ்கரபாண்டியன், பொதுமக்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.